TNVR020011022020

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.
2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06-ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.352/2020

| | | | |
|---|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக / காவல் சார்பு ஆய்வாளர்,<br>திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையம்,<br>குற்ற எண்.137/2019 | |
| குற்றம்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | | மணிமாலா, (46/19),<br>க/பெ.அந்தோணிராஜ்,<br>போஸ்ட் ஆபீஸ் ரோடு,<br>அனுப்பன்குளம்,<br>சிவகாசி. | |
| சம்பவம் நடந்த நாள் | | 02.03.2019 | |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 03.03.2019 | |
| எதிரி | | கைதான நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 26.11.2019 | 01.01.2020 |
| அரசு தரப்பு விசாரணை முடிவுற்ற நாள்<br><br>எதிரி தரப்பு விசாரணை முடிவுற்ற நாள் | –<br><br>– | 19.02.2026<br><br>இல்லை | |
| எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 15.07.2022 | |
| குற்றம் | | | |
| 1. சாட்டப்பட்டது | – | எதிரி மீது இதச பிரிவு 379–ன் கீழ் | |
| 2. வனையப்பட்டது | – | எதிரி மீது இதச பிரிவு 379–ன் கீழ் | |

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

| | | |
|---|---|---|
| காலதாமதத்திற்கான காரணம் | – | சாட்சி விசாரணைக்காக தாமதம் |
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 05.02.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br>அ.சா.2 05.02.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br>அ.சா.3 12.02.2026 ம் தேதி முதல் விசாரணை 12.02.2026 குறுக்கு விசாரணை<br>அ.சா.4 12.02.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை<br>அ.சா.5 19.02.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை |
| எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 26.02.2026 |
| எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச. பிரிவு 311 பிரிவின் படியான மனுக்கள் | – | |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி, M.B.A., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | – | திரு.G.நீர்காத்தலிங்கம், B.A., B.L., |
| எதிரியின் கூற்று | – | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

| | | |
|---|---|---|
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரியின் மீதான சட்டப்பிரிவு 379 இதசவின் கீழான குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கு சொத்தான சா.பொ.1 ஆன சுமார் 3–1/4 பவுன் எடையுள்ள டாலருடன் கூடிய கேரளா பேன்ஸி மாடல் தங்க செயின் ஒன்று (அறுந்த நிலையில்) இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பி.ஆர்.எண்.26/2020 வழங்கப்பட்டு அதனை CRMP.No.6728/2019 மனுவினை தாக்கல் செய்து அதில் பிறப்பித்த உத்தரவின் படி அதன் உரிமையாளரான அந்தோணிசெல்வி என்பவர் இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளார். அதனை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அவரே நிரந்தரமாக வைத்துக் கொள்ளுமாறு உத்தரவிடப்படுகிறது.<br><br>எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது 26.06.2020ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 02.03.2026-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி, M.B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.நீர்காத்தலிங்கம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப்


SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.........

**தீர்ப்புரை**

இவ்வழக்கின் புகார்தாரர் திருவில்லிபுத்தூர் இந்திராநகரில் உள்ள புனித வேளாங்கண்ணி அன்னை ஆலயத் திறப்பு விழாவில் 02.03.2019ம் தேதி மாலை 06.30 மணிக்கு கலந்து கொண்டதாகவும், திறப்பு விழா முடிந்து, இரவு 09.10 மணியளவில் ஆலயத்திற்கு வெளியே வடக்கு பக்கத்தில் நடந்த அன்னதானத்தில் சாப்பிட சென்ற போது, கூட்டம் அதிகமாக இருந்ததாகவும், அந்த கூட்ட நெரிசலை பயன்படுத்தி எதிரி புகார்தாரரை பின்னால் இருந்து தள்ளுவது போல், புகார்தாரரின் கழுத்தில் அணிந்திருந்த ரூ.32,500/- மதிப்புள்ள சுமார் 3-1/4 பவுன் எடையுள்ள, டாலருடன் கூடிய கேரளா பேன்ஸி மாடல் தங்க செயினை கட்டர் வைத்து, கட் பண்ணி, புகார்தாரருக்கு சட்டபூர்வமான இழப்பை ஏற்படுத்திய குற்றத்திற்காக திருவில்லிபுத்தூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது இதச பிரிவுகள் 379-ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) வழக்கு கோப்பில் எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பாணையின் படி எதிரி ஆஜராக, எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் நகல்கள் குவிமுச பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. பின்னர் எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கி எதிரி மீதான குற்றச்சாட்டினை விசாரணை செய்வதற்கு போதிய முகாந்திரம் இருந்தபடியால், எதிரி மீது இதச பிரிவுகள் 379-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு அவரிடம் குற்றம் குறித்து வினாவிய போது எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும் கூறியதால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு வழி வகை செய்யப்பட்டது.

3) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சா.பொ.1ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

**4) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:–**

(I) அ.சா.1 திருமதி.அந்தோணிசெல்வி தனது சாட்சியத்தில் தான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருவதாகவும், தான் ஆசிரியராக வேலை செய்து வருவதாகவும், கடந்த 02.03.2019ம் தேதி திருவில்லிபுத்தூர் இந்திரா நகர் மாதா கோவில் திறப்பு விழா நடந்தது என்றும், பூஜைக்கு பின் சம பந்தி நடந்தது என்றும், அப்போது கூட்டமாக இருந்தது என்றும், அப்போது வயதான பாட்டியின் செயின் காணாமல் போனதாக ஒலிப்பெருக்கியின் மூலம் அறிவித்தனர் என்றும், தானும் தனது செயினை பார்த்தபோது காணாமல் போயிருந்தது என்றும், 3–1/4 பவுன் கேரளா பேன்சி மாடல் செயின் ரூ.32500/– என்றும், தான் தேடி பார்த்தும் செயின் கிடைக்காததால் அன்று வீடு சென்று தனது கணவரிடம் சொல்லிவிட்டு மறுநாள் 03.03.2019 அன்று தனது கணவருடன் சென்று இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், புகார் மனு அசாஆ.1 என்றும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள செயின் தன்னுடையது தான் என்றும், புகைப்படம் சாபொ.1 என்றும், சிறிது நாட்களுக்கு பிறகு போலீசார் தன்னை தொடர்பு கொண்டு காவல் நிலையம் வரசொன்னார்கள் என்றும், தான் சென்று போலீசாரிடம் தனது செயினை அடையாளம் காட்டியதாகவும், பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து தனது செயினை பெற்றுக் கொண்டதாகவும், சம்பவம் நடந்து 7 வருடங்கள் ஆனதால் ஆஜர் எதிரியை சரியாக நியாபகமில்லை என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.2 திரு.ஆஞ்சே தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள 2வது கையெழுத்துக்கள் தன்னுடையது தான் என்றும், கடந்த 26.11.2019 அன்று தானும் தமிழரசன் என்பவரும் சர்ச் அருகில் பேசிக்கொண்டிருந்தபோது போலீசார் ஒருவரை விசாரித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், அந்த நபர் யார் என்று தனக்கு நியாபகமில்லை என்றும், போலீசார் தன்னிடம் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக வேறு ஒன்றும் தனக்கு தெரியாது என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில்



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

உள்ள 2 வது கையெழுத்து அசாஆ.2 என்றும், அத்தாட்சியிலுள்ள 2 வது கையெழுத்து அசாஆ.3 என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அ.சா.3 திரு.தமிழரசன் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் ஆவணங்களிலுள்ள முதலாவது கையெழுத்துக்கள் தன்னுடையது தான் என்றும், தனது அக்கா நகை திருடுபோனதற்காக காவல்நிலையம் சென்றபோது போலீசார் கேட்டுக்கொண்டதால் தான் கையெழுத்து செய்து கொடுத்ததாகவும், இவ்வழக்கு சம்மந்தமாக தனக்கு வேறு எதுவும் தெரியாது என்றும், ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து அசாஆ.4 என்றும், அத்தாட்சியிலுள்ள முதலாவது கையெழுத்து அசாஆ.5 என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்

(iv) அ.சா.4 திரு.கோவிந்தன் தனது சாட்சியத்தில் தான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், இதற்கு முன்னர் கடந்த 2019 ம் வருடம் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது கடந்த 03.03.2019 அன்று காலை 10.15 மணிக்கு திருவில்லிபுத்தூர் சந்தைபேட்டை தெருவை சேர்ந்த அந்தோணிசெல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.137/2019 பிரிவுகள் 379 இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கை அசாஆ.6 என்றும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(v) அ.சா.5 திரு.கருத்தப்பாண்டி தனது சாட்சியத்தில், தான் தற்போது சென்னை ஆயிரம் விளக்கு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இதற்கு முன்னர் திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது கடந்த 03.03.2019 அன்று தலைமை காவலர் கோவிந்தன் 1759 என்பவர் பதிவு செய்து வைத்திருந்த வழக்கு எண்.137/2019 பிரிவுகள்.379 இதச வழக்கு கோப்பை தனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

11.15 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஸ்டீபன் மற்றும் சாலமன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பார்வை மகஜர் அசாஆ.7 என்றும், வரைபடம் அசாஆ.8 என்றும், பின்னர் சாட்சிகள் அந்தோணி செல்வி, கலைசெல்வி, கனகராஜ் ஆகியோர்களை தனித்தனியோ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் தலைமை காவலர் கோவிந்தன் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், தனது விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரியை தேடி வந்து இவ்வழக்கு தொடர் விசாரணையில் இருந்து வந்த நிலையில் 26.11.2019 ம் தேதி 10.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் கனரா வங்கி அருகே சந்தேகத்தின் பேரில் நின்றுகொண்டிருந்த மணிமாலா என்பவரை பிடித்து விசாரணை செய்ததில் அவர் முன்னுக்கு பின் முரணாக சொன்னதால் காரணம் கூறி கைது செய்து பின்னர் 10.20 மணிக்கு சாட்சிகள் தமிழரசன் மற்றும் ஆஞ்சே ஆகியோர் முன்னிலையில் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மணிமாலாவிடம் குற்ற எண்.549/2019 வழக்கின் சொத்தை கைப்பற்றியும் வாக்குமூலத்தின் அடிப்படையில் 12.30 மணிக்கு சிவகாசி அனுப்பங்குளம் சத்யா நகர் மகாலட்சுமி வீட்டின் முன்பு எதிரி மணிமாலா அடையாளம் காட்டிய வழக்கு சொத்தை மகாலட்சுமி என்பவரிடமிருந்து 3 1/4 பவுன் டாலருடன் கூடிய தங்க செயின் ஒன்று அறுந்த நிலையில் அத்தாட்சியின் பேரில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.9 என்றும், அத்தாட்சி அசாஆ.10 என்றும், பின்னர் கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்ததாகவும், படிவம் 91 அசாஆ.11 என்றும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்ததாகவும், பின்னர் சாட்சி அந்தோணி செல்வி என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் 09.01.2021 அன்று தனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு.379 இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

5) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகள் குறித்து குவிமுச 313 (1) (ஆ) பிரிவின் கீழ் விசாரித்தபோது எதிரி பொய் சாட்சியம் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை எனக் கூறிக் கொண்டார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டது.

6) <u>தீர்வுக்குரிய பிரச்சனை :-</u>

அரசு தரப்பில் எதிரி மீது இதச பிரிவு 379-ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே தீர்வு செய்யப்படவேண்டிய பிரச்சனை ஆகும்.

7. இவ்வழக்கின் புகார்தாரர் திருவில்லிபுத்தூர் இந்திராநகரில் உள்ள புனித வேளாங்கண்ணி அன்னை ஆலயத் திறப்பு விழாவில் 02.03.2019 ம் தேதி மாலை 06.30 மணிக்கு கலந்து கொண்டதாகவும், திறப்பு விழா முடிந்து, இரவு 09.10 மணியளவில் ஆலயத்திற்கு வெளியே வடக்கு பக்கத்தில் நடந்த அன்னதானத்தில் சாப்பிட சென்ற போது, கூட்டம் அதிகமாக இருந்ததாகவும், அந்த கூட்ட நெரிசலை பயன்படுத்தி எதிரி புகார்தாரரை பின்னால் இருந்து தள்ளுவது போல், புகார்தாரரின் கழுத்தில் அணிந்திருந்த ரூ.32,500/- மதிப்புள்ள சுமார் 3-1/4 பவுன் எடையுள்ள, டாலருடன் கூடிய கேரளா பேன்ஸி மாடல் தங்க செயினை கட்டர் வைத்து கட் பண்ணி, புகார்தாரருக்கு சட்டபூர்வமான இழப்பை ஏற்படுத்தினார் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

8). அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரியை தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

9). எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது தனது வாதத்தில் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், இவ்வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும் அதனால் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறும் வாதிடப்பட்டது.

10). இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 02.03.2019 ம் தேதி திருவில்லிபுத்தூர் இந்திரா நகர் மாதா கோவில் திறப்பு விழா நடந்ததாகவும், அப்போது கூட்டமாக இருந்ததாகவும், ஒரு வயதான பாட்டியின் செயின் காணாமல் போனதாக ஒலிபெருக்கியின் மூலம் அறிவித்ததாகவும், தானும் தனது செயினை பார்த்த போது காணாமல் போய்யிருந்தாகவும், காணாமல் போன தனது செயினானது 3-1/4 பவுன் கேளரான பேன்ஸி மாடல் செயின் என்றும், அதன் மதிப்பு ரூ.32,500/- என்றும், தான் அக்கம் பக்கத்தில் தேடிப்பார்த்தும் செயின் கிடைக்காததால், தனது வீட்டிற்கு சென்று தனது கணவரிடம் சொல்லிவிட்டு மறுநாளான 03.03.2019 அன்று தனது கணவருடன் சென்று காவல்நிலையத்தில் மேற்படி சம்பவம் சம்பந்தமாக புகார் மனு கொடுத்ததாகவும், மேற்படி செயின் கிடைத்துவிட்டதாக சிறிது நாட்கள் கழித்து போலீசார் தகவல் கொடுத்து காவல் நிலையம் வரச் சொன்னதாகவும், தான் போலீசாரிடம் தனது செயினை அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் மனு செய்து அதனை பெற்றுக்கொண்டதாகவும், சம்பவம் நடந்து 7 வருடம் ஆனதால், ஆஜர் எதிரியை சரியாக தனக்கு நியாபகம் இல்லை என்றும் கூறியுள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில் மேற்படி 02.03.2019 அன்று புனித வேளாங்கண்னி ஆலயத்தின் திறப்பு விழாவில் 200 க்கும் மேற்பட்ட நபர்கள் இருந்ததாகவும், வெளியூரிலிருந்தும் நிறைய நபர்கள் வந்திருந்ததாகவும், மேற்படி ஆலயமானது சிறியது என்றும், அதனால் கூட்ட நெரிசல் அதிகமாக இருந்ததாகவும், தனது நகை காணாமல் போன அன்று வேறு ஒரு பாட்டியின் நகை காணாமல் போனதாக கேள்விப்பட்டதாகவும், மேற்படி தனது நகையின் ரசீதையும் புகார் கொடுத்த போது காவல் நிலையத்தில் கொடுத்ததாகவும், தான் தனது நகை காணாமல் போனது சம்பந்தமாக புகார் கொடுக்க



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

சென்ற போது தான், மேற்படி நகை காணாமல் போன மற்றொரு பாட்டியும் புகார் கொடுக்க வந்திருந்ததாகவும் கூறியுள்ளார்.

11. ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 26.11.2019 அன்று தானும், தமிழரசன் என்பவரும் சர்ஜ் அருகே நின்று பேசிக்கொண்டிருந்த போது போலீசார் ஒருவரை விசாரித்துக்கொண்டிருந்ததாகவும், அந்தநபர் யார் என்று தனக்கு நியாபகம் இல்லை என்றும், போலீசார் தன்னிடம் காவல் நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையெழுத்து வாங்கியதாகவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், இவ்வழக்கு சம்பந்தமாக தனக்கு வேறு எதுவும் தெரியாது என்றும் கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போதும் அரசு தரப்பிற்கு ஆதவராக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை.

12. மற்றொரு ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில்,தனது அக்கா நகை காணாமல் போனது சம்பந்தமாக காவல் நிலையம் சென்ற போது போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்து கொடுத்ததாகவும், இவ்வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போதும் அரசு தரப்பிற்கு ஆதவராக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை.

13. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.4 தனது சாட்சியத்தில், கடந்த 03.03.2019 அன்று அந்தோணிசெல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது பற்றி கூறியுள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில் சம்பவமானது 02.03.2019 அன்று நடந்ததாகவும், ஆனால் 03.03.2019 அன்று தான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதாகவும்,



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு 2–1/2 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும் என்றும், அக்கம் பக்கத்தில் தேடிப்பார்த்துவிட்டு புகார் கொடுத்ததால், காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மேற்படி முதல் தகவல் அறிக்கை 03.03.2019 அன்றே இந்நீதிமன்றத்திற்கு அனுப்பட்டுவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 தனது சாட்சியத்தில், கடந்த 03.03.2019 அன்று அ.சா.4 பதிவு செய்து வைத்திருந்த வழக்கு கோப்பை அன்றே தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தது பற்றியும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது பற்றியும், கடந்த 26.11.2019 அன்று சந்தேகத்தின் பேரில் எதிரியை கைது செய்து, சாட்சிகள் தமிழரசன் மற்றும ஆஞ்சே ஆகியோர் முன்னிலையில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மணிமாலாவிடமிருந்து குற்ற எண்.549/2019 வழக்கின் சொத்தை கைப்பற்றியதாகவும், மேலும் சிவகாசி அனுப்பன்குளம், சத்தியாநகரைச் சேர்ந்த மகாலட்சுமி என்பவரிடமிருந்து 3–1/4 பவுன் டாலருடன் கூடிய தங்கச் செயின் ஒன்று அறுந்த நிலையில் அத்தாட்சியின் பேரில், அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேற்படி வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தாகவும், எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

15. மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்ததிலிருந்து அ.சா.1 சம்பவ இடத்தில் வைத்து எதிரியை பார்க்கவில்லை என்பது புலப்படுகிறது. புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையிலும் எதிரி பற்றி குறிப்பிடப்படவில்லை. எதிரி கொடுத்ததாக கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே அவர் இவ்வழக்கின் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூல சாட்சிளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் அரசு தரப்பிற்கு எதிராக



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

பிறழ்சாட்சியம் அளித்துள்ளனர். எனவே எதிரி இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாகநேரடி சாட்சிகளோ, சந்தர்ப்ப சாட்சிகளோ இல்லாத நிலையில் இவ்வழக்கின் புலன் விசாரணை மேற்கொண்டு ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளித்த அ.சா.5ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரியை குற்றவாளி என்று தீர்மானிக்க இயலாது. அதனால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரின் மீதான சட்டப்பிரிவு 379 இதசவின் கீழான குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17. இவ்வழக்கு சொத்தான சா.பொ.1 ஆன சுமார் 3–1/4 பவுன் எடையுள்ள டாலருடன் கூடிய கேரளா பேன்ஸி மாடல் தங்க செயின் ஒன்று (அறுந்த நிலையில்) ஒன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பி.ஆர்.எண்.26/2020 வழங்கப்பட்டு அதனை CRMP.No.6728/2019 மனுவினை தாக்கல் செய்து அதில் பிறப்பித்த உத்தரவின் படி அதன் உரிமையாளரான அந்தோணிசெல்வி என்பவர் இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளார். அதனை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அவரே நிரந்தரமாக வைத்துக் கொள்ளுமாறு உத்தரவிடப்படுகிறது.

18. எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026ம் வருடம் மார்ச் மாதம் **06**ம் நாளாகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய



SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

பகரப்பட்டது.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

**1. அரசுத் தரப்பு சாட்சிகள் –**

அ.சா.1 – திருமதி.அந்தோணிசெல்வி

அ.சா.2 – திரு.ஆஞ்சே

அ.சா.3 – திரு.தமிழரசன்

அ.சா.4 – திரு.கோவிந்தன்

அ.சா.5 – திரு.கருத்தப்பாண்டி

**2. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் –**

அ.சா.ஆ.1 – புகார் மனு

அ.சா.ஆ.2 – ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம்

அ.சா.ஆ.3 – அத்தாட்சியில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம்

அ.சா.ஆ.4 – ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.3 ன் கையொப்பம்

அ.சா.ஆ.5 – அத்தாட்சியில் உள்ள அ.சா.3 ன் கையொப்பம்

அ.சா.ஆ.6 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.7 – பார்வை மகஜர்

அ.சா.ஆ.8 – வரைபடம்

அ.சா.ஆ.9 – ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.10 – அத்தாட்சி

அ.சா.ஆ.11 – படிவம் 91

**3. அரசு தரப்பு சான்று பொருள்** –

சா.பொ.1 – சுமார் 3–1/4 பவுன் எடையுள்ள டாலருடன் கூடிய கேரளா பேன்ஸி மாடல் தங்க செயின் ஒன்று (அறுந்த நிலையில்)

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

**<u>4. எதிரி தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள்</u>** –இல்லை.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

**நீதித்துறை நடுவர் எண்.II,**
**திருவில்லிபுத்தூர்.**

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |